**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 682 of 2012**

**Deposition of Witness P. W.1**

| | |
|---|---|
| **Name : அழகர்சாமி** | **Father/Husband's Name: சுந்தரம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 01.10.2024**

**A1 to A3 present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கணேஷ்நகர் காலனியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டபடும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கடந்த 12 வருடங்களுக்கு முன்பு காலை 11 மணியளவில் நான் வயலிலிருந்து வீட்டிற்கு சாப்பிட வந்த போது அழகாபுரி முச்சந்தி அருகே என்னை அருவாளில் எனது இடது கை, வலது கண்ணத்தில் வெட்டினார்கள். அப்போது ஆஜர் எதிரிகள் என்னை கோத்தா, கொம்மா என்று கெட்ட வார்த்தையில் பேசினார்கள். மேலும் எதிரிகள் என்னை துாக்கி கீழே போட்டதில் வலது முட்டி சரிந்து சிராய்ப்பு ஏற்பட்டது. வெட்டியதில் எனது கை தற்போது வரை பாதி முடங்கியுள்ளது. ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச்சேர்ந்தவர்கள் தான். பின்னர் சம்பவத்தன்று இரவு முழுவதும் வெட்டிவிடுவேன் எனவும் வீட்டை விட்டு வெளியே வா வெட்டாமல் விடமாட்டேன் எனவும் ஆஜர் எதிரிகள் கூறினர். பின்னர் பழனி அரசு மருத்துவமனை சென்று சிகிச்சைக்கு சேர்ந்தேன். சிகிச்சையில் இருந்த என்னை போலிசார் விசாரணை செய்தார்கள். சிகிச்சையில் இருந்த போது முருகன் , சித்ரா என்பவர்கள் சாட்சி கையொப்பம் இட்டார்கள். போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள்  தரப்பு குறுக்குவிசாரணை**

2. இல்லை

K R KALAIVANAN Digitally signed by K R KALAIVANAN Date: 2024.10.01 11:23:25 +0530

**நீதித்துறை நடுவர்**
**பழனி**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 682 of 2012**

**Deposition of Witness P. W.2**

| | |
|---|---|
| **Name : முருகன்** | **Father/Husband's Name: சுந்தரம்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling:** |
| **Religion:** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 01.10.2024**

**A1 to A3 present.**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது கணேஷ்நகர் காலனியில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ஐ எனது அண்ணன் ஆவார். ஆஜர் எதிரிகள் ஒரே ஊர்க்காரர்கள் ஆவார்கள். கடந்த 02.01.2012 ம் தேதி காலை 11 மணியிலிருந்து ஆஜர் எதிரிகள் எனது அண்ணனிடம் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். என்ன சண்டை என்றே எனக்கு தெரியாது. நான் கூலி வேலைக்கு சென்று வரும் போது என்னிடம் மேற்படி தகவலை சொன்னார்கள் நான் மாலை 7 மணியளவில் வீடு வந்த போது ஆஜர் எதிரிகள் அரிவாளால் அ.சா.1 ஐ துரைச்சாமி என்பவர் வீசினார். அப்போது அ.சா.1 க்கு இடது கையில் வெட்டு காயம் ஏற்பட்டு ரத்தபோக்கு ஏற்பட்டது. மேற்படி சம்பவத்தை நான் நேரில் பார்த்தேன். பின்னர் வலது கண்ணத்தில் ரத்த காயம் ஏற்பட்டிருந்தது. எதிரிகள் கெட்ட வார்த்தை பேசிக்கொண்டிருந்தனர். பின்னர் அ.சா.1 ஐ நாங்கள் பழனி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். மேற்படி சம்பவத்தின் போது கூட்டத்தில் எதிரி துரைச்சாமி மட்டும் எனது அண்ணனை அரிவாளால் வெட்டினார் மற்றவர்கள் யார் கூட்டத்தில் இருந்தார்கள் என்று எனக்கு ஞாபகமில்லை. பின்னர் எனது அண்ணனிடம் அரசு மருத்துவமனையில் போலிசார் விசாரணை செய்து வாக்குமூலம் பெற்றுக்கொண்டனர். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை</u>**

2. இல்லை

K R KALAIVANAN
Digitally signed by K R KALAIVANAN
Date: 2024.10.01 11:23:44 +0530

**நீதித்துறை நடுவர்**
**பழனி**